திருகோணமலை தந்த புதல்வரும்

இலங்கை நிர்வாகசேவையில் பணியாற்றியவரும்

திருகோணமலை, மூதூர்
உதவி அரசாங்க அதிபராகவும்

திருகோணமலை மாவட்ட இந்து கலாசார
பிராந்திய அலுவல்கள் அமைச்சின்
உதவிப்பணிப்பாளராகவும்

வட-கிழக்கு மாகாண அரசின் காணி, விவசாய
புனருத்தாரண அமைச்சராகவும்

பணியாற்றிய

## சி. எம். கணேசலிங்கம் (S. L. A. S.)

அவர்களின்

# நினைவு மலர்

26 - 4 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்வு


17

★

10

★

1928



உதிர்வு

28

★

01

★

1990

# சி. எம். கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

## மூத்த பிள்ளையார்

### சம்பந்தர் தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

### அப்பர் தேவாரம்

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங்கண்டேன்
பாராய்ப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்குமாறு கண்டேன்
வாய் மூரடிகளை நான் கண்டவாறே.

### பெரிய புராணம்

எடுக்கு மாக்கதை யின்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க விற்றைக் கருத்துள் இருத்துவாம்.

### கந்தபுராணம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளையாடற் புராணம்

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுத்தி யுறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

## திருப்பரங்கிரிப் புராணம்

வஞ்சகத்தி லொன்றானைத் துதிக்கைமிகத்
திரண்டானை வணங்காருள்ளே
அஞ்சரண் மூன்றானை மறை சொலும் நால்
வாயானை யத்தனாகித்
துஞ்சவுணர்க் கஞ்சானை சென்னியனி
யாறானைத் துகளெழானைச்
செஞ்சொல் மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ்
கற்பகத்தைச் சிந்தை செய்வாம்.

## சிவஞான சித்தியார்

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யும் தேவே.

## சிவபெருமான்

## அப்பர் தேவாரம்

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவா நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

## பெரிய புராணம்

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவள வெற்பென இடப்பாகம்
கொள்ளு மாமலை யாருடன் கூடவீற்றிருந்த
வள்ளலாரை முன்கண்டனர் வாக்கின் மன்னவனார்.

## கந்தபுராணம்

பிறப்பதும் இறப்பதும் பெயருஞ் செய்கையும்
மறைப்பதும் நினைப்பதும் வடிவம் யாவையும்
துறப்பதும் இன்மையும் பிறவுஞ் சூழ்களாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

## சீகாழித் தவ புராணம்

நீர்பூத்த பேரொளியாய் உயிர்க்குயிரா
அகண்டிதமாய் நிறைவாய் நீங்காப்
பேர்பூத்த குணங்குறிகளை இகந்தபழ
மறைக் கொழுந்தாய்ப் பெருமை சான்ற
பார்பூத்த பரையினொடு கலந்துகுரு
வாதிமும்மைப் படிவமாகிச்
சீர்பூத்த காழிநகர் அமர்ந்தபிர
மோனையாஞ் சிந்தை செய்வாம்.

பொன்னம்பலவர்

## அப்பர் தேவாரம்

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண்டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நினைத்தளை யுள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத் தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்று தாய் கோத்தும்பீ.

## பெரிய புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி யருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்து நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## காஞ்சிப் புராணம்

சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளும்
மறைக் கோவும் தழல்கால் சூலம்
அங்கேத்தும் அம்மானும் தத்தமது
தொழில் தலைநின்றாற்றச் செய்தோர்
பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
இருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்கேந்து மணிமன்றுட் குனிந்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்.

உமாதேவியார்

## சம்பந்தர் தேவாரம்

பந்துசேர் விரலாள் பவளத்துயர்
வாயினாள் பணிமாமதி போல்முகத்
தந்தமில்புக ழாண்மலை
மாதொடும் ஆதிப்பிரான்
வந்துசேர்விடம் வானவரெத்திசையும்
நிறைந்து வலஞ்செய்து மாமலர்
புந்தி செய்திறைஞ் சிப்பொழி
பூந்தராய் போற்றுதுமே.

## பெரிய புராணம்

தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்தவெள்ளி
மலையின்மேல் ஏறும்போது மகிழ்ச்சியால் அன்புபொங்க
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒருபாகத்துச்
சிலைநுதல் இமயவல்லி திருக்கண்ணோக் குற்றதன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளையாடற் புராணம்

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத் தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலபும் அடிகள் போற்றி.

### சிவகாமி அம்மையார்

## அப்பர் தேவாரம்

காம்பாடு தோளுமையாள் காணநட்டங்
கலந்தாடல் புரிந்தவன்காண் கையில் வெய்ய
பாம்பாடப் படுதலையிற் பலிகொள்வோன்காண்
பவளத்தின் பருவரைபோல் படிவத்தான் காண்
தாம்பாடு சினவிடையே பகடாக் கொண்ட
சங்கரன்காண் பொங்கரவக் கச்சையோன்காண்
சேம்பாடு வயல்புடைசூழ் திருப்புத்தூரில்
திருத்தளியான் காண் அவன் என் சிந்தையானே.

## பிரமோத்தர காண்டம்

பூரணியைத் தனுகரண புவனபோ
கங்கள்தமைப் புரக்குமாயா
காரணியைப் பசுபாச மலமகல
மெய்ஞ்ஞானக் கண்ணிற்தோன்றும்
ஆரணியைப் பரமசிவ னானந்த
நடத்தின் வைத்த அருட்கண்ணாளைச்
சீரணிகொள் பொழிற்தில்லைச் சிவகாம
சுந்தரியை சிந்தை செய்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய பிள்ளையார்

### சுந்தரர் தேவாரம்

பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை
  பொடியோடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாவின் வடபாலின் குணபாற்
  சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள்தம் பெருமானைக் கருமான்
  உரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை எறிகெடில வடவீரட் டானத்
  துறைவானை இறைபோதும் இகழ்வன் போலியானே.

## பெரிய புராணம்

பூந்தண் பொன்னி எந்நாளும்
  பொய்யா தனிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையில்
  மன்ன முன்னாள் வரைகிழிய
ஏந்தும் அயில்வேள் நிலைகாட்டி
  இமையோர் இகல்வெம் பகைகடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர்
  மூதூர் செல்வச் சேய்ஞலூர்

## கந்த புராணம்

மாயையின் வலியோனாகி மால்முதலோரை வென்றே
ஆயிரத்தோ ரெட்டண்டம் அரசுசெய்து நூற்றெட்டுக்
காயமதரிவின்றாக்க கடவுளர் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்தான் சென்னிவைப்பாம்.

## காஞ்சிப் புராணம்

முருகோட்டந் தரப்பாயும் மும்மதமும்
  ஊற்றெடுப்ப முறிவிற் கோட்டும்
ஒருகோட்டு மழகளிற்றை இருகோட்டும்
  முதுகளிறா உலவக் காட்டிப்
பருகோட்ட நறைவேட்டுப் பைங்கோட்டுத்
  தினைப்புனத்துப் பரன்மேற் கொண்டு
குருகோட்டும் பெடைமணந்த குமர கோட்
  டத்தடிகள் குலத்தாள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிவிரிஞ்சைப் புராணம்

அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித்துணைவர் அருளுங்கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயிலெடுத்து வருஞ்செவ்வேளைச்
சந்திப்போம் மலர் சொரிவோம் புகழ்ந்திடுவோம்.
அவன் கமலத் தாளும் தோளும்
சிந்திப்போம் ஆதலினால் நமதுபழ
வினைகளெலாம் சிந்திப்போமே.

காலபைரவர்

## அப்பர் தேவாரம்

விரித்தபல கதிர் கொள் சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்தோர் கோலகால பயிரவனாகி வேழம்
உரித்துமை அருத்துக் கண்டு ஒண்திருமணிவாய்க் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.

## காஞ்சிப் புராணம்

எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருந்நீர்வைப்பில்
அளியறத் தெய்வம் வாட்டும் எனுமுரைக்கமைய வன்றே
தெளியுமோ வலியைச் செற்றோற் செகுத்துரிக் கவயம் போர்த்த
வளியுளர் சச்சிகாவல் வைரவர்க் கன்பு செய்வாம்.

கலைமகள்

## சம்பந்தர் தேவாரம்

சினமலி கரியுரி செய்தசிவன் உறைதரு திருமிழ லையைமிகு
தனமனர் சிரபுர நகரிறை தமிழ்விர கனதுரை யொருபதும்
மனமகிழ் வொடுபயில் பவரெழில் மலர்மகள் கலைமகள் சயமகள்
இனமலி புகழ்மகள் இசைதர இருநில னிடையினி தமர்வரே

## திருமந்திரம்

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண் தாமரை
பாடுந் திருமுறை பகர்ப்பனி பாதங்கள்
சூடுமன் சென்னிவாய் தோத்திரஞ் சொல்லுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணம்

தாவறும் உலகெலாந் தந்தநான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வானிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

## திருவிளையாடற் புராணம்

பழுதகன்ற நால்வகைச் சொல் மலரெடுத்துப்
 பத்திபடப் பரப்பித்திக்கு
முழுதகன்று மணந்து சுவை யொழுகியன்
 பெறமுக்கண் மூர்த்தி தாளிற்
தொழுதகன்ற அன்பெலும்நார் தொடுத்தலங்கல்
 சூட்டவரிக் கரும்பும் தேனும்
கொழுதகன்ற வேண் தோட்டு மூண்டகத்தாள்
 அடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

## நந்திதேவர்

## திருமந்திரம்

நந்தி அருள் பெற்ற நாதரை நாடின்
நந்திகள் நால்வர் சிவ யோகபாமுனி
மன்றுதொழுத பாஞ்சலி வியாக்ரமர்
என்றிவ ரென்றோ டெண்மருமாமே.

## கந்தபுராணம்

ஐயிரு புராணநூ லமலற் கோதியும்
செய்யபவன் மறைகளுந் தெரிந்து மாயையால்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

## நால்வர்

## சேக்கிழார் நாயனார்- புராணம்

பூமியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன்கழல் போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன் தொண்டர்பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

## சிவபுராணம்

### கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க;
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசனடி போற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழ சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய்! விளங்(கு) ஒளியாய்!
எண் இறந்(து) எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன்;
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்(து) இளைத்தேன்; எம் பெருமான்!
மெய்யேயுன் பொன்னடிகள் கண்(டு) இன்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்(து) அகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமான னாம்விமலா!
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம் அள(வு)இறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்றமறை யோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்(து) அடியார் சிந்தனையுள் தேன்ஊறி (நின்று
பிறந்த பிறப்(பு) அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள்ஓர் ஐந்(து)உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்திருந்தாய் எம்பெருமான வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து)உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
மா(சு)அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்(று) அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே அள(வு) இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்(து) ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!
அன்பருக்(கு) அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்(து) என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்(று) இன்ப வெள்ளமே! அத்தா!மிக் காய்! நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே' என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்(கு) உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே?ஓ என்(று) என்று
போற்றிப் புகழ்ந்(து) இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்(டு)இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்(டு) அழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்(று) ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்த மனோலயம்

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுகற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்தித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாட்கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 13

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்
காதியும் அந்தமும் ஆயினாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருஞானசம்பந்தர் அருளிய

# திருகோணமலைப் பதிகம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரித்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண் செருந்திசண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொகுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறியாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

பணித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கணிந்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெளித்துமுன் அரற்றும் செழுங்கடற் றரளம்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேடும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடு முடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரை பல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம் வந்துலவும்
கோணமா மலையமர் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபதம் அடைந்த திரு. சி. எம். கணேசலிங்கம் அவர்களுடன் நீண்டகாலம் நெருங்கிய தொடர்பு உண்டு. கர்மயோகத்தை அடிப் படையாகக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை அமைத்து வாழ்ந்து கொண்டிருப்பதாக அடிக்கடி என்னிடம் கூறுவார். கடமை உணர்வும், சாந்த சுபாவமும், எவருக்கும் எவ்விதத் தீங்கும் இழைக்காத உபத்திர வம் அற்ற சுபாவங்கள் அவருடைய மிகச்சிறந்த சிறப்பியல்புடைய குணங்களாகும். இவர் அரசாங்கத்தில் கடமையாற்றும் காலங்களில் தன்னலமற்ற பணிகளை மக்களுக்குப் புரிந்திருக்கின்றார். அவருடைய அகால மரணம் மிகவும் விசனிக்கத்தக்கது. திரு. சி. எம். கணேசலிங் கத்தின் ஆத்மா நித்திய சாந்தி அடைவதாக!

ஓம் ஆத்ம பிரசாந்தாய நமக!

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாளர் சி. எம். கணேசலிங்கம் அவர்களின்

# ஆத்ம சாந்தி அஞ்சலி

புத்திஜீவியாய் அமைதியாக வாழ்ந்த திரு. சி. எம். கணேசலிங்கம் அவர்களுடைய ஆத்மா சாந்தியடைவதாக! அன்னாரின் மனைவி, மக்கள், சுற்றத்தார். நண்பர்கள் அனைவரும் அமைதியடைவார்களாக!

இலிகிதராய், பிரதம இலிகிதராய், உதவி அரசாங்க அதிபராய், பணிப்பாளராய், அமைச்சராய் உழைப்பால் உயர்ந்த உத்தமர் திரு. கணேசலிங்கம், தத்துவஞானி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுடைய தத்துவ சிந்தனைத் தேனைச் சுவைத்த ஞானி கணேசலிங்கம் அடக்கமும், அமைதியும், ஆக்கப்பணியில் ஊக்கமும் உடையவரும், பழக இனிய பண்பாளருமாகிய அன்பர் கணேசலிங்கத்துக்கு ஆயுள் இவ்வளவுதான். விதியை வென்றவர் யார்? ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழலிலும் தான் முந்துறும்'' என்று வள்ளுவர் கூறும் சர்வாத்ம தத்துவத்துக்கு இலக்கியமானார் கணேசலிங்கம். மகாத்மா காந்தியும் இந்த ஆத்மவிதித் தத்துவத்துக்கு இலக்காகி ஒருவனால் சுட்டுக்கொல்லப்படவில்லையா?

கொன்று செய்த கொடுமையை நினைத்துக் குமுறுவதும், கலங்குவதும் மனித மனத்தின் செயற்பாடு, அந்த மனமே மனிதனைச் சாந்தி, சமாதானம், அமைதிநிறைந்த ஆனந்த வாழ்வுக்கும் அழைத்துச்செல்கின்றது.

என்றும் அழிவில்லாத ஆத்மாவின் சாந்திக்காக அஞ்சலி செலுத்துகிறோம். எங்கள் அஞ்சலியைத் திருவாளர் கணேசலிங்கத்தின் ஆத்மா ஏற்று அமைதியும் ஆனந்தமும் அடைகின்றதென்று நாம் திருப்தியடைகிறோம். உண்மை நிகழ்வு என்ன? குடமிருக்கும்வரை தான் குடாகாயமென ஒன்றிருக்கும் குடம் உடைந்துவிட்டால் குடாகாயம் பராகாயத்துடன் சேர்ந்துவிடும். கணேசலிங்கமென்ற பூதவுடல் தான் அழிந்தது. அதனுள்ளிருந்த ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேர்ந்துவிட்டது. அதை நினைத்து வாழ்த்துவோம்: அஞ்சலி செலுத்துவோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக! அனைவரும் அமைதியடைவார்களாக!

சைவப்புலவர்–பண்டிதர்,
இ. வடிவேல்.

15, வித்தியாலயம் ஒழுங்கை,
திருகோணமலை.
06–04–1990.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மவீரர் கணேசலிங்கம்

தட்சணகைலாசமாம் திருகோணமலையில் பிறந்து விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்று மட்டக்களப்பு சென் மைக்கேல் கல்லூரியில் மேற்கல்வி கற்று 1949 ல் காத்தான்குடி அரசினர் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த கர்ம வீரர் கணேசலிங்கம் ஐயா ஆங்கில நூல்களை நிறையப் படித்தார். ஆங்கிலக் கவிஞர் சேக்ஸ்பியரின் நூல்களை விரும்பிக் கற்றார். சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தி போன்றோரின் நூல்களையும் படித்தார். இதனால் உயர்ந்த எண்ணங்கள் சிந்தனைகளோடு கூடி வாழ்ந்த இவர் பகவத்கீதையை தனது வாழ்க்கைத் துணை நூலாகக் கொண்டு கடமை செய்து பலனை எதிர்பாராது எதிலும் பற்றில்லாதவராக வாழ்ந்தார். எப்பதவிகளை வகித்தபோதிலும் நல்லது சொல்லியும், நல்லபடி வாழ்ந்து காட்டியும் நல்லாசிரியனாகவே — நல்லாசானாகவே காணப்பட்டார்.

ஆசிரியத் தொழிலை விட்டு கரடியனாறு கிருஷிகப் பாடசாலையில் 1951ல் எழுதுவினைஞராகப் பணி புரிந்தார். பல இடங்களிலும் பணிபுரிந்து வரும்போது 1978ல் இலங்கை நிர்வாக சேவையில் (S.L.A.S.) சித்தியடைந்து திருக்கோணமலைப் பட்டினத்துக்கு உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் ஸ்ரீ சண்முக வித்தியாலயம், கோணேஸ்வர வித்தியாலயம், சென் சேவையர் பாடசாலை, விக்னேஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றுக்குக் காணி எடுத்துக் கொடுத்தார். காளி கோயில் தேர் எரிந்தபோது நட்டஈடு எடுக்க உதவி செய்தார். பாலையூற்று அன்புவழிபுரம் கிராமங்களுக்கு குழாய் நீர் கிடைக்கச் செய்தார்.

1981ல் மூதூர்ப் பகுதிக்கு உதவி அரசாங்க அதிபராக மாற்றம் பெற்றார். அங்குள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்து விவசாயத்துக்குப் புத்துயிரளித்தார். சிரமதானமூலம் மயானங்களைத் திருத்தினார். இந்து சமய விழாக்களை நடத்தி சமய எழுச்சியை உண்டு பண்ணினார். பதினொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள நாற்பதினாயிரம் மக்களுக்கு வெள்ள நிவாரணம் எடுத்துக் கொடுத்தார். உணவு முத்திரை பெறாத வறிய ஏழைகள் பலருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு முத்திரை எடுத்துக் கொடுத்து அவர்களுக்கு வாழ்வளித்தார். 1985ல் ஓய்வு பெற்றார்.

ஐயாவின் பேராற்றலைக் கண்ட அரசியலார் இவரை திருகோணமலை மாவட்ட இந்து கலாச்சார உதவிப் பணிப்பாளராக 1986ல் நியமித்தனர். இக்காலத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பாதிப்படைந்த பல ஆலயங்களின் புனரமைப்புக்கு உதவி செய்தார். இந்து சமய நிறுவனங்களோடு தொடர்புகொண்டு இந்து சமய கலாச்சாரப் பணிகளை ஊக்குவித்தார்.

ஐயா பதவிகளை நாடிச் செல்லவில்லை. பதவிகள் அவரைத் தேடி வந்தன. வடக்கு கிழக்கு மாகாணசபையில் மந்திரியாக இருக்கும்படி கேட்டனர். முதலில் மறுத்தார். பின் தான் பிறந்த ஊருக்கும் தமிழ் மக்களுக்கும் தன்னாலியன்ற பணிகளைப் புரியவேண்டும் என்ற ஆவலின் தூண்டுதலினாலேயே 1988 டிசம்பரில் இப்பதவியை ஏற்றுக்கொண்டார். காணி விவசாயம் புனர்வாழ்வு அமைச்சராகப் பணியாற்றிய இக்காலத்தில் மக்கள் நலனுக்காகப் பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் அக்கறை எடுத்துப் பெரும் பங்களித்தார்.

இவர் பதவிக் காலத்திலேயே காணி விவசாய அமைச்சினால் வவுனியா மாவட்டத்தில் ஒரு பெரிய விவசாயக் கல்லூரி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக் கல்லூரி வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். உப்புவெளிக் கிராமத்தில் கால் நடை அபிவிருத்திப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நல்லினக் கால் நடைகள் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டன.

திருக்கோணமலை நகரில் சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைப்பதிலும் தான் முன்னின்றுழைத்தார். இவரது அயரா முயற்சியினால் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோணமலை சனீஸ்வரன் கோயில் வெகு விரைவில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ விஸ்வநாதர் சிவன் கோயில் புனரமைப்பதற்கு இவரது முயற்சியினால் மூன்று லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

வன் செயலால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு பெருந்தொகை நிவாரணப் பணங்கள் கிடைக்க ஆவன செய்தார்.

மக்கள் அடிக்கடி முறைப்பாடுகள் செய்தார்கள். பிரச்சினைகள் தோன்றின. ஐயா கொள்கைகளை விட்டுக் கொடுக்கவில்லை' பதவியை விட்டுக் கொடுத்தார். 1989 ஒக்ரோபரில் பதவியை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகினார். இதையிட்டு அவர் கவலைப்படவில்லை. ஆனால் மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பை இழந்துவிட்டதாகக் கூறினார். அரசியலில் இருந்து ஒதுங்கி வாழ்ந்தார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற வள்ளுவர் வாக்குக்கமைய எப்போதுமே அவர் புகழுடன் வாழ்ந்தார். திருக்கோணமலை அபிவிருத்திச் சங்கம், றொட்டரிக் கிளப், பகாய் சமய இயக்கம், சமாதான சபை ஆகிய பல பொது நிறுவனங்களில் ஈடுபட்டுச் சேவை செய்தார். ஏழைகள் மேல் எப்போதும் அவர் கவனம் இருந்தது. ஏழைகள் வாழவேண்டும் என்பதே அவர் லட்சியம். ஏழைக்கேது இன்பம் முருகா என்று அடிக்கடி கூறுவார்.

ஐயாவின் சேவைகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து அவரது சேவைகளில் பங்குபற்றி அயராது உழைத்து வந்த ஐயாவின் அருமைப் பாரியார் அவர்களுக்கும் மக்கள் கடமைப்பட்டுள்ளனர். 28.1.90 அதிகாலை அகால மரணமடைந்த ஐயா அவர்களுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் வெள்ளம்போல் திரண்டனர். அனுதாபம் தெரிவித்தனர். சேவையைப் பாராட்டினர்.

ஐயாவின் பிரிவால் வருந்தும் மனைவி மக்களுக்கும், உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் மன ஆறுதலைக் கொடுக்கவும் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல கோணேசப் பெருமானை எல்லோரும் வேண்டுதல் செய்வோம்.

இன்பமே சூழ்க ! — எல்லோரும் வாழ்க !!

35, சாரதா வீதி,
திருக்கோணமலை,
1-4-90

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
திருச்சிற்றம்பலம்

# சிவகதியடைந்துள்ள உத்தமரை நினைந்துகொண்ட நற்செய்தி

தென்கயிலை எனப் புனிதர் பேரவையின் விதிமுறை உலகம் ஏற்றிப் போற்றுகின்ற இத் திருத்தலத்தில் அவதானமாக அடிவைத்துத் தாமும் வாழ்ந்து, தம்மோடு இணைந்தவர்களையும் அவ்வடிச்சுவட்டின் வழி அழைத்துச்சென்று வாழ்ந்தவர்கள்-வாழ்பவர்கள் இத்திருத்தலமாகிய திருகோணமலையில் மிக மிக சொற்பமானோரே. அவர்களுள் படாடோபமின்றி செறுக்கறுத்துச் செம்மை வாழ்வு வாழ்ந்த தன் பழுதிலாச் சிறப்பும் பெருமையும் ஒருங்கே அமையப்பெற்ற உத்தமர்தான் நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சிவகதியடைந்த க. மு. கணேசலிங்கம் ஐயா அவர்கள். மன்றத்தின் வளர்ச்சியிலும் அதன் பணிகளிலும் ஊக்கங்கொண்டவர். மன்றத்தின் தேவைகளுக்குத் தம்மால் இயன்றளவு பேராதரவு அளித்து உதவியவர்கள். அதேபோன்று நமது தாயகத்தில் ஆத்மீகப் பணிகளில் ஈடுபாடுகொண்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்றத்தாழ்வுகளற்ற நன்னிலையில் தம்மாலான உதவிகளைச் செய்தருளியவர்கள். தத்துவஞான நன்னெறியில் தமது வாழ்வையே அர்ப்பணித்து ஆத்மீக தரும நீதியின் அடிச்சுவட்டில் தளராத நெஞ்சினராக வாழ்ந்ததற்குரிய அடையாளங்கள் பலவுண்டு. உலகம்புகழ் தத்துவஞான அரசன் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஐயா அவர்களின் தத்துவஞானக் கோட்பாட்டினதும், பகவத்கீதையின் ஞான வைராக்கியத் தியாகக் கோட்பாடுகளுக்குத் தம்மை உட்படுத்திப் பல பிரச்சினைகள் எழுகின்றபோதெல்லாம் இத்தத்துவஞானங்களின் ஒளியை விளக்குத் திரியைத் தூண்டுவதுபோல் தூண்டிவிட்டுப் பிரச்சினைகளால் எழுகின்ற இருளை அகற்றித் தான் பெறுகின்ற இன்பநிலையை மற்றவர்களும் பெறவேண்டுமென்ற ஆர்வத்தைத் தமது திருவுள்ளத்தின் அழகாகக்கொண்ட இலட்சியமிக்க மனிதாபிமான இலட்சணங்கொண்டு வாழ்ந்த நற்பண்புமிக்க உயர் நாகரிகமான உத்தமரை எங்கள் திருத்தலமாகிய தென் கயிலையாம் திருகோணமலை இழந்துவிட்டது குறித்து நாம் துயரப்பட்டாலும், சன்மார்க்க திருநெறிக்கு தூக்குமேடை அமைத்துவிட்டு சன்மார்க்க தெருநெறிக்கு சிம்மாசனம் அமைத்து விட்ட இந்த ஈனர்கள் வீணர்கள் கூடி நடாத்துகின்ற ஈன உலகினின்று உத்தமராம் கணேசலிங்கம் ஐயா அவர்களை மண்ணரசிலிந்து மீட்டு விண்ணரசுக்குப் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்ற இறைவனால் ஏற்படுத்தப்பட்ட திருவருள் அழைப்புக்கு அவர்கள் உட்பட்டு-வழிபட்டு தமது வாழ்நாளில் இறைவனை நெஞ்சாரவழிபட்ட நற்பயனைப் பெற்றுவிட்டார்கள் என்பதில் ஐயம் வேண்டாம். எனவேதான் அருட்சோதி வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளும் தமது அறிவுரையில் "ஈன உலகுக்கு இன்சை வையேன் வெண்ணிலாவே" என்று அறிவுறுத்தியருளினார்கள். உத்தமர் கணேசலிங்கம் ஐயா அவர்கள் என்றென்றும் காணா உலகவாசியாக இங்கும் விளங்குவார். அவர்களுடைய மாசற்ற மணிபோன்ற நற்பண்பு நிலை என்றென்றும் வாழ்க-வளர்க! அவர்களின் தூய ஆன்மா எல்லாம் வல்ல ஆன்மநாயகனாம் சிவபிரானின் திருவடித் தாமரைகளில் அமைதியுற்று விளங்குவதாக பிரார்த்திக்கின்றோம். சிவ சிவ

"ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

வணக்கம்.

இவ்வண்ணம்,
மன்றத்தின் அறங்காவலர் குழுவினர்.

இளைஞர் அருள்நெறி மன்றம்,
திருகோணமலை.
7-4-1990.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கணேசமாமாவுக்குக் காணிக்கை

பூமியை மிஞ்சிய பொறுமையின் வடிவே
புண்ணியத் திருவுருவே – எம் மனதில்
காலத்தால் அழியாத காவியமே!
ஞாலமதில் உன்சேவை போதுமென்றெண்ணி
கூற்றுவன் ஏன் உன்னுயிரை
குண்டுருவில் கவர்ந்து சென்றான்?
மண்ணுலகில் உன்சேவை முடியுமுன்பே
விண்ணுலகும் உன்சேவை வேண்டியதோ–அதனால்
காலத்தின் தேவையது காலனைத் தூதனுப்பி-உனை
கட்டாய இடமாற்றம் செய்ததுவோ?

நீ புரட்சிக்குரியவன் அல்லவே
பூஜைக்குரியவன்
பகைமைக்குரியவன் அல்லவே
பாசத்திற்குரியவன்
அன்பையும் அறிவையும்
பண்பையும் பணிவையும்
எளிமையையும் இனிமையையும்
நாம் முழுமையாகப் பார்த்தது
உன்னிடம்தான்
நீ ஆன்மீக வாதியல்ல
அடிப்படை மனிதத்துவத்தைப்
புரிந்துகொண்ட ஒரு பகுத்தறிவாதி
உன் வாய்மொழி கேட்போருக்கு
கீதா உபதேசம் வேண்டியதில்லை
சிந்தனையில் உயர்வாய் இரு
செயற்பாட்டில் எளிமையாய் இரு-என
உயர்வுக்கு நீ சொன்ன உபதேசம்
இன்னும் எம் காதுகளில்
இரைந்து கொண்டுதான் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எம்மை எச்சரித்து வழிநடத்திய
கைகாட்டி - எம்
அறிவுப் பசிக்கு விருந்தளித்த
அமுத சுரபி - உன்
கடுமையான தொனியில்கூட
கருணையின் வடிவத்தைத்தான்
நான் பார்த்திருக்கின்றேன்
சொல்வதை விட - நீ
செய்வதுதான் அதிகம்
கடமையைக் கடமைக்காகச் செய்த
ஒரு கர்மவீரன் நீ
நண்பனாய் மந்திரியாய்
நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்
பார்வையிலே சேவகனாய் - எனும்
பாரதியின் பாடல்வரிகளில் - உன்னை
கலியுகக் கண்ணனாக காண்கின்றோம்
பூக்கொண்டு ஆராதிப்பதற்கு
நீ பொருத்தமற்றவன் - ஏனெனில்
மணத்தையும் குணத்தையும் அவை
உன்னிடம் தானே இரவல் வாங்கின?
புல்லின் நுனியும்
பூக்களின் இதழ்களும் - உன்
பாதச் சுவடுகளில் சுகம் காணும்
எறும்புகூட உன்னால்
துன்பமடைந்ததை நாம் பார்த்ததில்லை
உணர்வெல்லாம் நிறைந்து
உதிரத்தால் ஒன்றுபட்டு
உயிரில் உறைந்துவிட்ட - உன்னை
இதயத்தின் ஒவ்வொரு துடிப்பிலும்
நாம் உணர்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வடிவையும்
அறிவின் தெளிவையும்
பண்பின் மகிமையையும்
பணிவின் பெருமையையும்
உழைப்பின் உயர்வையும்
உண்மையின் தத்துவத்தையும்
எளிமையின் இருப்பிடத்தையும்
இரக்கத்தின் உறைவிடத்தையும்
முயற்சியின் முழுமையையும்
மொத்த வடிவாகக் கொண்ட - நீ
ஒரு முழு மனிதன்!
இம் மானிட தத்துவத்தை-எமக்கு
பாடமாகத் தந்த நீ
ஒரு பல்கலைக்கழகம்
உனது முடிவு ஒரு
முடிந்த முடிவல்ல
உன் வழியில்-தம்
வழியைத் தொடரப் போகும் - எமது
புதிய சமுதாயத்தின்
பலமான அத்திவாரம்
உன் வாழ்க்கைப் புத்தகத்தின்
முடிக்கப்படாத பகுதிகளை
முடிக்கு முன்பே - நீ
முடிந்துவிட்டதேனோ?
[முடிக்கப்பட்டதேனோ?]

மருமகன்
எம். கங்காதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திதி வெண்பா

சீருலவு சுக்கிலவாண் டிற்பொலியும் தைத்திங்கள்
சேர்பரபக் கத்துதியை சீர்நாளே — பேருலவு
சீமான் கணேசலிங்கம் தென் கயிலைக் கோணமலைக்
கோமான் பதஞ்சேர் தினம்.

# கணேசலிங்கப் பிரபாவம்

1. கயலுகளும் நீலமணி வாவி சூழ்ந்து
கவின்பெருக்கு மட்டுநகர் போற்றவாழ்ந்த
உயர்குணசீ லன்முத்து லிங்கவேளும்
உருப்பெருகு பகவதிப்பிள் ளையுமாய்க்கூடி
முயல்தவமே திரண்டுவடி வெடுத்த பாங்கில்
முழுமதிவா னிழிந்துபுவி வந்தாலென்ன
இயலுமெழிற் கோலநிறை வடிவுதாங்கி
ஈழமணி நாடிலங்க அவதரித்தோன்.

2. தினகரனோ சுதாகரனோ குழந்தையாகச்
செனித்த தெனப் பார்த்தோர் களிசைபாராட்டி
மனமகிழ மகவுக்குத் தந்தைதாயர்
மகிழ்சிறந்து கணேசலிங்க நாமஞ்சூட்டி
அனுதினமும் அருத்திடுபா லமுதினோடு
ஔவை தமிழ்ப்பா டல்களும் அளவியூட்டி
இனமுறுசுற் றத்தார்க ளெலாம்சீராட்டி
இலங்கு கண்ணின் மணியாகப் போற்றமேவி

3. வேளைநிகர் தையல்நா யகம் சான்றாண்மை
மிகவுடைய சுந்தரலிங் கம்பண்பாரும்
காளைதுரை சிங்கமயிற் சாயல்பூண்ட
காந்தைமங்கை யர்க்கரசி துடிநேர்மின்னாள்
மாழையுண்கண் அரியமலர் ஆயினோரை
மாண்புசெறி உடன்பிறந்தாராகக் கொண்டு
நாளொருவண் ணம்பொழுதோர் மேனியாக
நற்றவத்தில் மலர்ந்தருவக் கொழுந்தர்யோங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அன்னைமடி மீதில்வளர் சாலைதானே
அருந்தமிழின் சுவையோர்ந்து நெடிதுகற்று
மன்னியல்சேர் ஆங்கிலத்தின் மகிமைநாடி
வயங்குமொழி நுட்பங்கள் இனிது தேர்ந்து
சொன்னலமும் பொருணலமுங் கண்டுதுய்த்து
துவிபாஷா விற்பன்னம் துலங்கப்பெற்று
உன்னதமார் ஆசிரியத் தொழில் மேற்கொண்டு
ஓர்சிலவாண் டாசானாய்ச் சேவையாற்றி

5. அரசாங்க சேவைவழி சமூகத்திற்கு
அரும்பணியாற் றுதல்சாலும் என்றநோக்கில்
விரவுமெழுதுநராகி முதன்மையுற்று
மேன்மைதிகழ் நிருவாக சேவைசார்ந்து
பரவுதவி அரசாங்க அதிபராகப்
பதவியுயர் வுற்றதனை யடுத்துமூதூர்
மருவுதிருக் கோணமலைப் பதிகள்மேவி
மக்கள்மனங் குளிரவரும் பணிபுரிந்தார்.

6. ஈகை பிறர் துயர்துடைத்தல், சுற்றம் காத்தல்
இவற்றுக்கில்லறம் பேணும் தேவை நோக்கி
வாகை செறி கோணமலை ராஜகோபால்
வள்ளல் மனை செல்வநா யகமின் பெற்ற
பாகுகனி மொழியருண விழிகொள்யோகப்
பைந்தொடியை அக்கினிசான் றாகவேட்டு
ஓகையொடு மனைக்கிழத்தி யாக்கியன்பால்
உடலுமுயி ரும்போலொன் றாகிமேவி

7. விழியிரண்டா யினும்பார்வை ஒன்றேயாக
விளங்குதல் போல் இருவோரும் கருத்தாலொன்றி
மொழிமனமெய் ஒருநெறியே பயில்வதாகி
முன்னின்று சமூகநல மேம்பாட்டிற்கு
வழிவகையாய்க் கருமங்கள் பலமேற் கொண்டும்
வயங்கிடுமெண் ணான்கறங்கள் அவனிபோற்ற
ஒழிவில்வகை நிதம் புரிந்தும் கோணநாதர்
உடனுறைமா துமையம்மை யருளினாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கலையறிவும் குணநலனும் வனப்புமொன்றிக்
கவினமைந்த உருத்திகளும் ரமேஷன் கெங்கேழ்
அலர்மகனின் சுதனிகளும் வடிவும் பார்த்தன்
அனையபராக் கிரமஞ்சேர் பிரகாஷ் வேளே
நிலவுமிழுந் தரள நகை வாணி நேரும்
நிறை கலைகள் ஒருருவாயிணைந்த கோலம்
உலவு மெழில் வைஜயந்திட என்போர் தம்மை
உலகுபுகழ் பிள்ளைகளாய்ப் பெற்றுவந்தே

9. முந்துசமூ கந்தழைக்கப் பணிபல்லாற்றால்
முனைந்தியாற்றிப் பின்சமயப் பணிசெய் நோக்கில்
இந்துகலாச் சாரவமைச் சழைப்பையேற்று
இலகுதுணைப் பணிப்பாளர் பதவிதாங்கி
அந்தமில் கோ யிற்புனருத் தாபனத்துக்
காமுதவி புரிந்துபல பாங்கில்மக்கள்
சிந்தையினில் சமயவுணர் வோங்கற்கான
சிறப்புறு நல்மார்க்கங்கள் திகழச்செய்தார்.

10. மக்களுக்கும் மதத்துக்கும் சேவையாற்றி
வருங்காலை வடகீழ்மா காணமன்று
தக்கபணிக் கிவர்சேவையாற்றல் நாடி
சார்புனர்வாழ் வுத்துறையின்மைச்சராக
மிக்கவுயர் பொறுப்பதனை நல்கஏற்று
வினைத்திறத்தா லன்னியநாட்டுத விபெற்றும்
தொக்கபிற வளங் கொண்டும் பிரதேசங்கள்
துரிதஅபி விருத்திபெற உழைத்துநின்றார்.

11. மனுநெறியில் வழுவாது கடமைதானே
வணங்குதெய்வ மெனமனத்தில் மதித்துப்போற்றி
அனுதினமும் மனுக்குலத்துக் காகச்சேவை
ஆற்றுவதே வாழ்வினிலட் சியமாய்க்கொண்டு
தினையளவும் பிறருக்குத் தீமையெண்ணாச்
சிந்தையராய் வாழ்ந்திட்ட கணேசலிங்கம்
தனுகரண புவனபோ கந்துறந்து
தாழ்சடை வேணிப்பரமர் தாளுற்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செய்தி

திரு. சி. எம். கணேசலிங்கத்தை நான் அறிந்தது ஒரு வருடம் மட்டுமே. ஆனால் அவரின் எளிமையான தன்மை மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கு என்னை மிகவும் கவர்ந்து விட்டது. பண்பாடு கொண்டவர் திரு. கணேசலிங்கம். இன்னலுற்ற ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்கவெனவே அவருக்கு வட-கிழக்கு மாகாண சபை புனருத்தாரண அமைச்சையும் அவர் நீண்டக்கால அரசாங்க சேவையில் பெற்ற அனுபவத்தைப் பயன்படுத்த விவசாய அமைச்சும் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் அப்பணியைச் செவ்வனே செய்தார். ஆனால் அவர் எடுத்த பணியை முற்றாகப் பூர்த்தி செய்யு முன்பே அவர் பணியிலிருந்து அகற்றப்பட்டார்.

அவரது சமூக சேவையும், சமயத் தொண்டும் அனைவரும் அறிந்ததே. திருகோணமலையில் சீரழிந்து கிடக்கும் சைவ ஆலயங்களை சீரமைக்கப் பெரும் பாடுபட்டார். அதற்காக ஒரு நிதியினை ஆரம்பிக்க வேண்டுமென ஆலோசனை கூறியவர் அவரே.

அவர் இன்று எங்கள் மத்தியில் இல்லாவிட்டாலும் அவரது பணி தொடரும்.

அவரது ஆத்மா சாந்தி அடைவதாக!

**Lt. Gen. G. D. G. N. செனவிரத்தின VsV**
ஆளுநர் — வடக்கு — கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகிறோம்

அன்னாரின் இறுதிநேரத்தில் ஓடோடி வந்து உதவி செய்தவர்களுக்கும் பின்னர் எம்முடன் தோளோடு தோள் நின்ற நெஞ்சங்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபத் தந்திகள், கடிதங்கள் அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி.

மனைவி, மக்கள், உறவினர்கள்.

75, இராஜவரோதயம் வீதி,
திருகோணமலை,
26-04-1990.

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org